DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, PANRUTI.

CC. No. 65 /2023

Deposition of Witness : LW14 /PW10

| Name | பத்மாவதி, வருவாய் வட்டாச்சியர் (ஓய்வு) | Taluk | பண்ருட்டி |
|---|---|---|---|
| Husband Name | துரைசாமி | Village | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **11.09.2025** | | | |

(A 1, present. A2,3 absent. 317 Cr.P.C petition filed and allowed)

சாட்சியை கடலூர் மாவட்டம், மாவட்ட குற்றப்பிரிவு (நிலம்) பெண் தலைமை காவலர் ரஞ்சினி WHC- 1477 அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை :**

நான் முண்டியம்பாக்கம் வடிப்பக அலுவலராக பணிபுரிந்து 30.11.2018 அன்று பணி ஓய்வு பெற்றேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ந.க.ஆ.1/9043/2012 நாள். 11.07.2012 கடித்தையும், அதனுடன் கிராம கணக்கு நகல் , கிராம நிர்வாக அலுவலர் அறிக்கை இணைத்து நான் தான் கடலூர் மாவட்ட நில அபகரிப்பு தடுப்பு பிரிவு காவல் ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். அந்த கடித்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மேற்படி கடித்துடன் பண்ருட்டி வேகாகொல்லை கிராமத்தில் ரீ.சர்வே எண்.934/2,935, புது சர்வே எண்.666/2ஏ கிராம கணக்கு சம்மந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் அனுப்பிவைத்தேன். **மேற்படி கடிதம்(அசல்) அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. உரிய கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய கிராம கணக்கு நகல் மற்றும் அறிக்கை** ஏற்கனவே சமூகம் நீதிமன்றத்தில் அ.சா.ஆ.3ஆக அ.சா.8 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. **மேற்சொன்ன சர்வே எண். சம்மந்தப்பட்ட வருவாய் ஆவணங்கள், பண்ருட்டி கூடுதல் தலைமையிடத்து துணை வட்டாச்சியர் அவர்களால் சான்றிட்டு கையொப்பம் இட்டு 22.05.2012 என்று தேதியிட்ட சான்றிட்ட நகல்கள் எதிரி தரப்பு ஆட்சேபனையுடன் அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி பண்ருட்டி கூடுதல் தலைமையிடத்து துணை வட்டாச்சியரிடம் மேற்படி ஆவணங்களை நான் என்னிடம் சமர்பிக்குமாறு கேட்தன்பேரில் மேற்படி துணை வட்டாச்சியர் மேற்படி ஆவணங்களை

மேற்சொன்னவாறு சான்றிட்டு என்னிடம் சமர்பித்தார். அதே தான் என்னுடைய கடித்துடன் மேற்சொன்ன நிலஅபகரிப்பு நில காவல் ஆய்வார் அவர்களிடம் சமர்பித்தேன். மேற்படி ஆவணங்களில் மேற்சொன்ன சர்வே. எண் சம்மந்தப்பட்ட அனைத்து விவரங்களும் குறிப்பிட்ப்புடுள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என்னை எந்த நிலையில் உள்ள காவல் விசாரணை செய்தார்கள் என்றால் நிலை எனக்கு ஞாபகம் இல்லை. நில அபகரிப்பு தொடர்பான போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். வட்டாச்சியர் அலுவலத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். என்னுடைய பதவி நிலை என்னவென்றால் வருவாய் வட்டாச்சியர் மற்றும் நிர்வாக துறை நீதிபதி ஆகும். என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றாலம், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றாலுல் சரியல்ல. எத்தனை முறை ஒட்டுமொத்த தமிழகம் முழுவதும் மறு சர்வே எண் செய்துள்ளார்கள் என்றால் அது எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. பண்ருட்டியில் 1972 முதல் 1973 மறு சர்வே எண் செய்துள்ளார்கள். அதன்பிறகு செய்யவில்லை. ஒரு குறிப்பிட்டட சர்வே எண்ணிற்கு நீதிமன்ற உத்தரவின்பேரிலோ, அல்லது மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரிலோ மறு சர்வே எண் ஆய்வு செய்யலாம் என்றால் சரிதான். வருவாய் நிலை ஆணையம் எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும், ஆஜர் இல்லா எதிரிகளுக்கம் எந்த விதமான சம்மந்தமும் இல்லை.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, PANRUTI.

CC. No. 65 /2023

Deposition of Witness : LW11 /PW9

| | | | |
|---|---|---|---|
| Name | ராமலிங்கம் சார்பதிவாளர் (ஓய்வு) | Taluk | பண்ருட்டி |
| Fathers Name | வடிவேல் | Village | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **11.09.2025** | | | |

(A 1, present. A2,3 absent. 317 Cr.P.C petition filed and allowed)

சாட்சியை கடலூர் மாவட்டம், மாவட்ட குற்றப்பிரிவு (நிலம்) பெண் தலைமை காவலர் ரஞ்சினி WHC- 1477 அவர்கள் அடையாளம் காட்டினார்.

முதல் விசாரணை :

நான் குறிஞ்சிப்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணிபுரிந்து 30.06.2014 அன்று பணி ஓய்வு பெற்றேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ந.க.எண்.178/2012 நாள் 02.04.2012 தேதியிட்ட கடிதம் நான் கடலூர் நில அபகரிப்பு தடுப்பு தனிபிரிவு காவல் ஆய்வாளருக்கு அனுப்பி கடிதம் ஆகும். மேற்படி கடிதத்துடன் ஆவண எண்.2973/1940, 24.09.1940 தேதியிட்ட ஆவணத்தின் நகல் சான்றிட்டு அனுப்பி வைத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ந.க.எண்.266/2012 நாள் 09.05.2012 தேதியிட்ட கடிதம் நான் கடலூர் நில அபகரிப்பு தடுப்பு தனிபிரிவு காவல் ஆய்வாளருக்கு அனுப்பி கடிதம் ஆகும். மேற்படி கடிதத்துடன் வேகக்கொல்லை கிராமத்தில் பழைய சர்வே எண்.935 சம்மந்தப்பட்ட விலங்க சான்றிதழ் 01.01.1967 முதல் 01.01.1978 வரை அனுப்பிவைத்தேன். மேற்படி கடிதங்களிலும், ஆவண எண்.2973/1940 நகல் மற்றும் விலங்க சான்றிதழ்களில் உள்ள கையொப்பம் மற்றும் முத்திரை என்னுடையது தான். **மேற்படி கடிதங்கள் (அசல் ) மற்றும் ஆவணம் சான்றிட்ட நகல் விலங்கசான்றிதழ் (அசல்) அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி ஆவணங்கள் சம்மந்தமாகவும், மேற்சொன்ன சர்வே எண்.சம்மந்தப்பட்ட விலங்கசான்றிதழை சம்மந்தமாக நில அபகரிப்பு தடுப்பு பிரிவு போலிசார் என்னிடம் இந்த வழக்கு சம்மந்தமாக கோரி இருந்ததன் பேரில் மேற்படி ஆவணத்தின் சான்றிட்ட நகல் மற்றும் மேற்சொன்ன விலங்க சான்றிதழ்

மேற்சொன்ன கடிதங்களுடன் சமர்பித்தேன். மேற்படி வில்லங் சான்றிதழிகளில் மேற்படி சர்வே எண் சம்மந்தப்பட்ட அனைத்து விவரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள். தற்போது எப்போது விசாரித்தார்கள் என்றும் ஞாபகம் இல்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசரணை**

விலங்க சான்றிகள் மற்றும இதர ஆவணங்களை எழுத்து மூலமாக வேண்டுகோள் விடுத்தன் அடிப்படையில் தான் சான்றிட்ட நகல் அளித்தேன் என்றால் சரிதான். குற்ற வழக்கு எண் அந்த வேண்டுகோள் கடித்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆவணங்களை பார்த்து தான் சாட்சியம் அளிக்கமுடியும். சர்வே எண்.935/ தொடர்பாக வில்லங்க இருப்பதா குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதில் உள்ள பதிவுகள் தான் அது. எந்த நிலையில் உள்ள காவலர் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் எனக்கு தற்போது சரியாக ஞாபகம் இல்லை. போலிசார் விசாரணையில் வில்லங்க பதிவு உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வில்லங்க பதிவு எதுவும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரணை செய்த தேதி சரியாக ஞாபகம் இல்லை என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரணை செய்த 161 வாக்குமூலத்தில் வில்லங்கம் எதுவும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனல் நான் அளித்த வில்லங்க சான்றிதழ்களில் வில்லங்க பதிவு உள்ளதாக தான் குறிப்பிட்டுள்ளேள். என் மேல் அதிகாரியின் மற்றும் காவல் அதிகாரி அலுவலக சாயல் ஏதுவாக ஆவணங்களை பார்த்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகக்கும், ஆஜர் இல்லா எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த விதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.